ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
ஐப்பசி

NOVEMBER
1971

தொகுதி 33
பகுதி 11

Vol. 33
No. 11

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

கிணறு வெட்ட பூதம் தோன்றினால் ... 201
சில விவரங்கள் ... 203
பிரயோகஸாரம் ... 206
ஆரோக்கிய கல்பத்துருமம் ... 212

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்

ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன்	போன் நெ 31
நர்ஸிங்ஹோம்	போன் நெ. 44
தலைமை வைத்யர்	போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு) போன் நெ 27
	(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர்	(வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்

பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : *4202.*

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

101 ஆவர்த்தித க்ஷீரபலா தைலம்

(200 மி.கி. காப்ஸ்யூல்)

200	100	50
ரூ. 10-00	ரூ. 5-25	ரூ. 2-75

பாக்கிங், தபால் செலவு தனி.

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின்
மேற்பார்வையில் தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram : KALIA

Phone : Office - 3232
Resi - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ, கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி : KALIA

போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி: "அம்ருதம்"   P. B. No. 1382.   போன்: 26066

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள்:

1. 23 B, பூஸா ரோடு, புது டில்லி : போன் : 585687
2. மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 ,, 2984
3. கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 ,, 85752
4. வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 ,, 32219
5. பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 ,, 92
6. மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 ,, 195
7. கடைவீதி, பொன்னானி ,, 41
8. ரௌண்ட் வெஸ்டு திருச்சூர்-1 ,, 378
9. கோர்ட் ரோடு, ஆலத்தூர் ,, 87
10. மெயின் ரோடு, கஞ்சிக்கோடு
11. ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18,, 33758
12. இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 ,, 4891
13. 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 ,, 33988
14. T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2
15. No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன்: 2)

நர்ஸிங்ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன்: 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களேயும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினுல் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளேயும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலேவலி முதலிய கோளாறுகளேயும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்திஞல் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலே 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைஞபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் திறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS Etc.

Please Contact :

PURI BROTHERS (REGD.)

MUSK MERCHANTS

JULLUNDUR-1

Grams : "VENKATESH"   Phone : 3923

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	விரோதிகிருது ஐப்பசி	பகுதி 11
Vol. 33	1971 நவம்பர்	No. 11

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।

यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நம: சிவகுமாராய.

கிணறு வெட்ட பூதம் தோன்றினால்?

தாகம் தீர்த்துக்கொள்ளத் தேவைப்படும் என்று சிலர் கிணறு தோண்ட ஆரம்பித்தார்கள். ஆனால் கிணறு தோண்டத் தோண்ட நீர் வரவில்லை. அதற்குப் பதிலாக பூதம் ஒன்று தோன்றி கிணறு வெட்டுவோரின் ரக்தத்தைக் குடித்து தன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டது. அதுபோல் சுத்தமான இந்திய வைத்ய அபிவிருத்திக்காக பழைய இந்திய வைத்யப் பள்ளிகளை எல்லாம் மூடிவிட்டு புதிய பள்ளிகள் ஆரம்பித்தாலும், ''தேய்ந்தான், பாய்ந்தான், கொம்புகறுத்தான், தும்பிக்கையை உள்ளுக்கு இழுத்தான்'' என்ற சொல்போல, யானை வருவதாக நினைத்து எருமைக்கடா வந்ததுபோல் இந்திய வைத்யப் பள்ளிகளில் ஆங்கில வைத்யம் மறுபடியும் போதிக்கப்பட்டு வருகிறது. இது பூதம் கிணறு தோண்டியவரின் ரக்தத்தை உறிஞ்சி தாகம் தீர்த்துக்கொண்டது போல் இந்திய வைத்யத்தின் உயிரைப் போக்கிவிடும் என்பது அனுபவ பூர்வமானது.

சுத்தமான இந்திய வைத்ய பாட திட்டத்தை வகுத்துக் கொடுத்த குழுவில் முக்யமான புதுக்கோட்டை டாக்டர் ஸ்ரீ ஸௌம்ய நாராயணன், பாளையங்கோட்டை இந்திய வைத்ய கலாசாலையில் நடைமுறையில் நாற்பது சதவீதம் ஆங்கில வைத்யம் போதிக்கப்பட்டு வருவதாக மிகவும் வருத்தத்துடன் புகார் கூறுகிருர். இது நாளடைவில் இந்திய வைத்யத்தை அப்பியாசம் செய்வதில் மாணவர்களின் கவனத்தைக் குறைத்து விடும்.

முன் காலத்து வித்யாப்யாசத்திற்கும் தற்காலத்து வித்யாப்யாசத்திற்கும் மிக மிக மாறுதல் உள்ளது. முன் காலத்தில் குரு குல வாசம் செய்து மிகவும் உழைத்து கலவி பயிலவேண்டும். இப்பொழுது பள்ளிகளில் பாஸ் செய்தால் மட்டும் போதும். இதனல் கல்வியின் தரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. தவிர, வைத்யக் கல்வி வெறும் படிப்போடு நிற்கவில்லை. பல காலம் அனுபவம் வந்தால்தான் வைத்யத்தில் ஒரு உயர்ந்த அறிவை அடைய முடியும். கலாசாலையில் குருகுல வாசத்தில் ஏற்படக் கூடிய சிரமங்கள் ஒன்றும் கிடையாது. கஷ்டமான நிலைமைகளில் போராட வேண்டிய சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கிடைப்பது அபூர்வம். அவ்வித கஷ்டமான நிலைமையில் ஆங்கில வைத்யத்தை உபயோகிப்பது என்று ஏற்பட்டுவிட்டால், பிறகு இந்திய வைத்யத்தின் திறமை மங்கிப் போகுமல்லவா?

நான்கு பாதங்கள் சரியாக இருந்தால்தான் இந்திய வைத்யம் நிமிர்ந்து நிற்க முடியும். தற்பொழுது ஆங்கில வைத்யம் மிகவும் முன்னேறிவிட்டதாகவும், அதனல் சில சந்தர்ப்பங்களில் அதையும் கையாளவேண்டும் என்றும் நினைக்கலாம். நமது சித்தௌஷதங்களை விட ஆங்கில மருந்துகள் ஒன்றும் பிரமாதமாக இல்லை ரக்தம், மலம், மூத்திரம் முதலியவற்றைப் பரீக்ஷை செய்து சில ஆண்டிபயாட்டிக்குகளை (Antibiotics) உபயோகிப்பதுதான் அதிக முன்னேற்றம் என்று கருதப்படுகிறது. நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட ரஸ கந்தக பாஷாணச் சரக்குகளைவிட ஆண்டிபயாட்டிக்குகள் (Antibiotics) ஒன்றும் சிறந்தவை அல்ல. ஆண்டிபயாட்டிக்குகளால் கெடுதல்கள் மிகவும் உண்டு. நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட ரஸௌஷதங்களில் தோஷம் கிடையாது. ஆகவே மருந்து விஷயத்தில் இந்திய வைத்யமே இன்றும் மேலானது.

ஆங்கில வைத்யம் தெரிந்துகொள்வதை நாம் மறுக்கவில்லை. ஆனல் இந்திய வைத்யப் பள்ளியில் அது வேண்டாம் என்பது தான். இந்திய வைத்யம் படித்த பிறகு ஆங்கில வைத்யம் கற்பதோ, ஆங்கில வைத்யம் படித்த பிறகு இந்திய வைத்யம் கற்பதோ ஓரளவு இரண்டிலும் பயிற்சி ஏற்பட அனுகூலமாக இருக்கும். கலப்படம், போலிச் சரக்குகள் முதலியன மலிந்த இக் காலத்தில் கலப்பு வைத்யத்தினல் போலி வைத்யர்கள் அதிகமாவதைத் தடுக்க முடியாதுபோகும். ஸ்ரீ தன்வந்தரி பகவானின் அருளும் சித்தர்களின் ஆசியும் பெற்று இந்திய வைத்யம் சுத்தமான வழியில் தழைத்தோங்கப் பிரார்த்திக்கிறேம்.

இந்திய வைத்திய மத்திய ஆலோசனை சட்டம்

(The Indian Medicine Central Council Act, 1970)

சில விவரங்கள்

டாக்டர் வி. நாராயணசாமி, H P.I.M.
(இந்திய வைத்திய மத்திய ஆலோசனைக் குழுவின்
நிர்வாக கமிட்டி அங்கத்தினர்.)

இந்திய வைத்திய மத்திய ஆலோசனை மசோதா சென்ற வருஷ முடிவில் 1970-ல் 48-வது சட்டமாக பார்லிமண்டில் அங்கீகரிக்கப்பட்டது என்பதை பல வைத்திய நண்பர்கள் அறிவார்கள். இரண்டு வருஷங்களுக்கு முன் லோக சபையின் அங்கத்தினர் ஒருவர் ஒரு மசோதா கொண்டுவந்தார். அப்பொழுது அரசே ஒரு மசோதாவை தயாரித்திருப்பதாகவும் அதை சட்டமாக்க விரும்புவதாகவும் உறுதி கூறின பிறகு தனியார் மசோதா திரும்ப வாங்கப்பட்டது. பிறகு இந்த மசோதாவை கொண்டுவந்து சட்டமாக்கினர். இதன் பெருமை லோக சபை, ராஜ்ய சபை அங்கத்தினர்கள் அனைவருக்கும் சொந்தமானுலும் கூட, அதிக அளவில் அக்கரை கொண்டவர்கள் ஆயுர்வேத வைத்தியர்களாகிய பண்டித சிவசர்மா அவர்களும் பண்டித அநந்ததிரிபாடி சர்மா அவர்களும்தான். அரசுதரப்பில், அக்காலத்தில் மத்திய சுகாதார மந்திரியாக இருந்தவரும் தற்சமயம் தமிழ் நாட்டின் கவர்னராக இருக்கும் திருவாளர் கே. கே. ஷா அவர்கள் அதிக அக்கரை கொண்டு இதை சட்டமாக்கினர். அவருக்கு உதவியாக இருந்தவரும் உப சுகாதார மந்திரி திரு. பி. எஸ். மூர்த்தி அவர்கள். இவ்விருவருக்கும் இந்தியவைத்திய கழகம் என்றென்றும் கடமைப்பட்டவராவார்கள்.

சட்டத்தின் நோக்கம் பின்வருமாறு—ஆயுர்வேத சித்த யுனானி வைத்தியங்கள் பலகாலமாக இந்தியாவில் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. அவைகளை முன்னேற்றமடைவிக்கும் திட்டத்தில், வைத்தியக் கல்வி, பயிற்சி, தொழில், ஆராய்ச்சி போன்ற விஷயங்களில் அரசு எந்த விதமான பாதுகாப்பையும் அளிக்கவில்லை. மற்ற மாநில அரசுகள் தமக்கேற்ற கொள்கைகளை கொண்டு இந்திய வைத்திய வளர்ச்சிக்கு முயன்றனர். அதில் இந்திய வைத்தியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளிலோ ஊதியத்திலோ, கல்வி தரத்திலோ ஏற்ற தாழ்வு ஏற்பட்டன.

அதனுல் போதுமான வளர்ச்சி ஏற்படவில்லை. இரண்டு நூற்ருண்டுகளுக்குள்ளாக நவீன வைத்தியம் (allopathy) அதற்கு வேறு நாடான இந்தியாவில் வேரூன்றி வளர்ந்து செழித்து வருகிறது. இவ்வளர்ச்சிக்கு காரணம் இந்தியன் மெடிக்கல் கவுன்சில்தான் என்று தெரிகிறது. இந்த ஆலோசனைக்குழு இந்தியா முழுவதும் ஒரே விதமான பாடதிட்டதை ஒழுங்கு படுத்தி கல்விச்சாலைகளுக்கு கொடுத்தனர். திறம்பட பாட திட்டம் அமுலாகிறதா என்பதை மேற்பார்வை பார்த்தனர். இவ் வைத்தியர்களுக்காக சலுகைகளை கோரி அரசை வற்புறுத்தினர். ஆகையால் அது வளர்ச்சி அடைந்தது. இந்த இந்திய வைத்திய மத்திய ஆலோசனை சட்டத்தால் இதுவரையிலுமிருந்த இந்திய வைத்தியத்தின் குறைபாடு சட்ட பூர்வமாக நீக்கப் படுகிறது.

சட்டமான பிறகு சட்டத்தை அமுலாக்க சில விதிகளை தயாரிக்க வேண்டும். இவ்விதிகள் தயாரிக்கப்பட்ட பிறகு 71-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 21-ம் தேதி ஆலோசனைக்குழு அங்கத்தினர்கள் கூட்டம் துவங்கியது துவக்கிவைத்தவர் மத்திய சுகாதார மந்திரி திரு உமா சங்கர தீக்ஷிதர்.

சட்டத்தின்படி, இந்த ஆலோசனைக்குழுவின் அங்கத்தினர்கள், பதிவு பெற்ற வைத்தியர்களால் அந்தந்த மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் இந்த தேர்தல் நடத்துவதாகயிருந்தால் எல்லா மாநிலங்களிலும் வைத்தியர்களை பதிவு செய்யும் சடடமிருக்கிறதா, பதிவு பெற்ற வைத்தியர்களின் பெயர்கள் அட்டவணையாக்கப் பட்டிருக்கிறதா என்பவைகளை கவனித்த பிறகே தேர்தல் நடத்த முடியும். இது காலதாமத மாகக் கூடிய விஷயம். ஆகையால் மத்திய அரசு சட்ட பூர்வ மாக சில அங்கத்தினர்களை நியமித்து சட்டத்தை செயல்படுத்தத் துணிந்தனர். இந்த நியமனமும் ஒருவித திட்டத்தின்படிதான் நடந்திருக்கிறது.

(1) எந்தெந்த மாநிலங்களில் இந்திய வைத்திய ஆலோசனைக்குழு, பதிவுக்குழு இருக்கிறதோ அக்குழுவின் தலைவரும் அங்கத்தினர்களிலொருவரும், (2) எந்தெந்த மாநிலங்களில் பல்கலைக்கழகம் இந்திய வைத்தியமுறைகளை போதிக்கின்றனவோ அப்பல்கலைகழகத்தின் சார்பில் மூவர் (3) மேற்சொன்ன இரண்டு பிரிவுகளிலும் எவ்வளவு பேர் இருக்கின்றனரோ அதற்கு மூன்றிலொரு பங்கு வைத்தியர்கள், தலைசிறந்தவர்களாகவும், தமது தொழிலாலோ அல்லது மற்ற விசேஷ பயிற்சி

ஞலோ ஆலோசனைக்குழுவிற்கு இன்றியமையாதவர்களென்று தோன்றினுல் அரசு அவர்களை நியமிப்பார்கள். அப்படி இந்த குழுவில் ஆயுர்வேத சித்தாயுனுனி வைத்தியர்கள் 70 பேர் இருக்கின்றனர் இதில் 50 பேர் ஆயுர்வேத வைத்தியர்கள். மேலும் பதிவு பெற்ற வைத்தியர்கள் 10,000 பேருக்கு ஒருவராகவும் 10,000 பேருக்கு மேல் இருந்தால் இருவராகவும் ஒரு கணக்கு நியமித்திருக்கிருர்கள்.

இந்த சட்டப்படி பாடதிட்டம் அமைக்க ஒரு குழு நியமித்திருக்கிருர்கள். இந்திய வைத்தியத்தின் வளர்ச்சியையும், வைத்திய முறையை நவீன காலத்துக்கு தகுந்த மாதிரி செயல்படுத்தவும், போட்டியிருக்கும் இக்காலத்தில் எவ்வித ஆராய்ச்சியால் பொது ஜனங்களுக்கு குறைந்த காலத்தில், குறைந்த சிலவில் நிறைந்த ஆரோக்கியத்தை கொடுக்க முடியுமென்பதை தீர்மானிக்க வேண்டும். பல காலமாக நடைமுறையில்லாத வைத்தியத்தின் பல பகுதிகளை எப்படி முன்னனியில் கொண்டுவர வேண்டுமென்பதும் இக்குழுவின் நோக்கம்.

இரண்டாவது குழு வைத்தியர்களை பதிவு செய்வது. மா நில பதிவு புத்தகங்களில் இப்பொழுது காணப்படுகிற அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் மாநில அரசின் இணக்கத்துடன் மத்திய பதிவு புத்தகத்தில் அங்கீகரிக்கப்படும். மூன்ருவது குழு வைத்தியர்களின் ஒழுங்கு முறைகளை கவனிப்பது (Regulation Committee) வைத்தியர்களுக்கு வேண்டிய நடவடிக்கைகளில் சில ஒழுங்கு திட்டங்கள் இருக்கவேண்டும். அவை யாவன என்பதை தீர்மானிக்க இந்த குழு உதவும்.

ஆக இந்திய வைத்தியத்திற்கு வருங்காலம் பசுமையுடையதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. மருத்துவ பயிற்சியும், மருத்துவமும் மாநில அரசைச் சேர்ந்தன. அவ்வரசின் ஒத்துழைப்பு இருந்தால்தான் இந்திய வைத்தியம் முன்னேற முடியும். இந்திய வைத்திய மத்திய ஆலோசனைச் குழு சிலவற்றை சிபரர்சுதான் செய்ய முடியும். அதனுடைய அதிகாரம் அவ்வளவு தான். ஆனுல் மத்திய சட்டமாக அமைந்தபின் ராஜ்ய லோக சபை அங்கத்தினர்கள் தமது தமது மாநில அரசுகளை இணங்கச் செய்ய வேண்டும்.

பிரயோகஸாரம்

நான்காவது படலம்

இனி உன்மாதத்தின் சிகித்ஸைகளைக் கூறுவோமாக.

1. தோஷங்களால் ஏற்படுவதும் பூதங்களால் ஏற்படுவது மாக இரண்டுவகை. கூடப்பிறந்தது நடுவிலே வந்தது என இரண்டுவகை. விஷமமான உணவு, அசுசியான உணவு, பட்டினி, பயம், வைராக்கியம், ஏமாற்றம், கோபம், அபிசாரம், குருஅபசாரம், தைவாபராதம், இவைகள் காரணமாக உன்மாதம் ஏற்படலாம்.

2. வாத உன்மாதம்: உணவு ஜீர்ணமானதும் அதிகமாவது, வாஸனை திரவியங்கள் பூ இவைகளில் ஆசை, உடல் கருத்தல், அதிகப்பேச்சு, பாட்டில் ஆசை பெரும் சிரிப்பு, கைதட்டல், அழுகை நிலை தடுமாறுதல், இவை குறிகள்.

3. பித்த உன்மாதம்: ஜலத்தில் ஆவல், ஆத்திரம், விஷம புத்தி, சில்லிட்ட உணவில் விருப்பம், பிதற்றல், பயம், சந்தோஷம், ஓட்டம், பரபரப்பு, காங்கை இவை குறிகள்.

4. கப உன்மாதம்: உடலுறவில் ஈடுபாடு, தூக்கம், அழுகை, மனப்பதற்றமின்மை, சுமுகமாக இருத்தல், உமிழ்நீர் அதிகமாக ஊறுதல், வாந்தி, விக்கல், உடல் வெளுத்தல் நோய் அதிகம் காணுதல், தனிமையில் விருப்பம், பரபரப்பின்மை இவை குறிகள். இந்த லக்ஷணங்களுக்கேற்ப தக்க சிகித்ஸை செய்யவேண்டும்.

5 இரண்டு அல்லது மூன்று தோஷங்கள் கலந்து வருவது சிகித்ஸையில் சிரமப்படும் வாத உன்மாதத்தில் நெய்மருந்தும், பித்த உன்மாதத்தில் விரேசனமும் கப உன்மாதத்தில் வமனமும் செய்விக்கவேண்டும்.

6. தாமரைக்கிழங்கு, அதிமதுரம், தண்ணீர் விட்டான், நிலப்பனை, பேரீச்சை, திப்பிலி, இவைகளின் கஷாயம் சர்க்கரை தேன் நெய் சேர்த்துச் சாப்பிட நல்லது. கொன்னைப்பூவின் கேசரத்தை கோமய நீருடனும் தாய்ப்பாலுடனும் சாப்பிட நல்லது. வெண்கரும்பு வேர் தூளை சர்க்கரையுடனும், நருவிளிப்பட்டைச் சாற்றை பாலுடனும் அல்லது தாய்ப்பாலுடனும் சாப்பிட நல்லது. ஊமத்தை வேரை சூர்ணம் செய்து மோரிலும் நல்லெண்ணெயிலும் குழப்பி பூமிக்குள் ஏழுநாள் வைத்திருந்து எடுத்து, மேல் பூச நல்லது. சந்தனம், பச்சைகர்பூரம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், இலுப்பைப்பூ, திப்பிலி, தேன், நெய், சர்க்கரை, நாமக்கருப்பன் சாறு தாய்ப்பால் இவைகளால் நஸ்யமிட நல்லது.

7. அபஸ்மாரம் : இது அமாவாசை பௌர்ணமி நாட்களில் வெளிப்படும். உடல் தளர்ந்து, நினைவு மாறி திடீரென பூமியில் விழுதலும் நுரை வாயிலிருந்து வெளியாதலும், கரகரத்த சத்தமும் பிறகு வெகுநேரம் குரல் கம்மி இருத்தலும் கண் நிலைகுத்தி இருத்தலும், பல்லைக்கடித்தலும், உடல் மஞ்சள் பாரித்தலும், மெத்தனமாக இருத்தலும், உணவில் அதிக ஆசையும், முகத்தில் கோணலும் இதன் குறிகள்.

8 இதில் இந்துப்பு, தேள் கொடுக்கிலை, கோஷ்டம், திப்பிலி, சிறுதேக்கு இவைகளின் சூர்ணத்தை மூக்கில் நஸ்யமிட நல்லது. ஓநாயின் மலத்தையும், உமிழ்நீரையும் தூபமிடலாம், அந்த ஓநாய் கடித்திறந்த மானின் எலும்பை நஸ்யமிடவும், கஷாயமிட்டு சாப்பிடவும் நல்லது. எள்ளுடன் பயந்த நாயுடைய மலத்தையும் சேர்த்து, ஆட்டி எண்ணெயை எடுத்து நஸ்யமிட நல்லது. தர்ப்பை, நாணல், கரும்பு இவைகளின் வேர், நிலப்பூசனி கிழங்கு இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது. பூசனி சாற்றில் அதிமதுரத்தைக் கல்கமாக்கி தயாரித்த நெய்யில் சாப்பிட நல்லது. பிரம்மிசாறு வசம்பு, கோஷ்டம், சங்கிலை, நெல்லிக்காய், இவைகளின் கஷாயம், எருது, ஆடு இவைகளின் மூத்திரம், அதிமதுரம், கடுகு, பெருங்காயம் இவைகளின் கல்கம் இத்துடன் தயாரித்த நெய் சாப்பிட நல்லது.

9. செவதைவேர், வாய்விளங்கம், திரிபலை, கொடுவேலி வேர், சுக்கு சரக்கொன்னைப்பட்டை, இந்துப்பு திப்பிலி இவைகளின் கல்கத்துடன் பிராம்மி சாற்றில் தயாரித்த நெய் சாப்பிட நல்லது மஞ்சட்டி, கொடிவேலி வேர் வாய்விடங்கம், கோஷ்டம், மஞ்சள், கோரைக்கிழங்கு, செவதைவேர் நன்னாரி வேர், மரமஞ்சள், கடுகரோஹிணீ, சங்கங்குப்பி, ஏலம், வசம்பு, அதிமதுரம், வட்டத்திருப்பி, திப்பிலி, இவைகளின் கல்கத்துடன் தயாரித்த நெய் அபஸ்மாரம், குஷ்டம் இவைகளில் நல்லது.

10. பிராம்மி, கண்டந்திப்பிலி, கோஷ்டம், ஓரிலைவேர், வசம்பு கடுக்காய், அல்லிக்கிழங்கு, ஆடாதோடை, இவைகளைக் கஷாயமாகவும் சேர்த்து தயாரித்த பசுநெய் அல்லது இவைகளைக் கல்கமாகவும், சங்கங்குப்பி கஷாயத்துடனும் தயாரித்த எண்ணெய் நெய் கூட்டும் அபஸ்மாரத்தில் நல்லது.

11. கடுகெண்ணெயில் கீரி, ஓணான், பசு, பூனை, ஆடு, பாம்பு இவைகளின் பித்தத்தை சேர்த்துக் காய்ச்சி நஸ்யமிட நல்லது.

12. எட்டு பலம் ஜீவனீயச் சரக்குகளின் கஷாயம் பால் 64 பலம் நெய்யும் எண்ணெயும் 16 பலம் இவைகளை முறைப்படி காய்ச்சி உள்ளுக்குச் சாப்பிட, மேலுக்குத் தேய்க்க நல்லது.

13. சங்கங்குப்பி கஷாயத்தில், அதையே கல்கமாக்கி, நெய்யும், நல்லெண்ணெயும் சேர்த்து காய்ச்சி சாப்பிட நல்லது.

14. உள்ளிப்பூண்டு, கோஷ்டம், ஓமம், முருங்கை விதை, மனேசிலே, சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் இவைகளைக் கல்கமாக்கி ஆட்டு மூத்திரத்துடன் நல்லெண்ணெயில் காய்ச்சி நஸ்யமிட நல்லது.

ஐந்தாவது படலம்

பூதக்ரஹ சிகித்ஸை

1. தூபம், நஸ்யம், அஞ்சனம், மேல்பூச்சு, ஸ்நானம் பானம் ஆக ஆறுவிதம் பூதசிகித்ஸையாகும்.

2. நொச்சி, துளஸீ, தேவதாளிபீர்க்கு, சுக்கு, மிளகு, மிளகு, திப்பிலி, பேய்ச்சுரை, இவைகளால் தூபமிடலாம். தாளகம். வசப்பு, கோஷ்டம், முள்ளுகத்திரி. அஸாருன், பருத்தி விதை, சிவநிர்மால்யம், இவைகளாலும், வசம்பு, பூனை எலும்பு, காக்கை முட்டை, மனேசிலே, பிச்சிப்பூ, இவைகளாலும், அமுக்கராக் கிழங்கு, வசம்பு, வெண்கடுகு, தேவதாளி பீர்க்கு, கடுகு ரோஹிணி, வேப்பம்பட்டை இவைகளாலும் சுக்கு, மிளகு, திப்பிலி, மலங்காரைக்காய், கோழி முட்டை ஓடு, வசம்பு, ஊமத்தை இவைகளாலும். காட்டுப் பருத்திச் செடி, கோஷ்டம், டீகாமலி கோந்து, இவைகளாலும். ஸூரியாவர்த்தி, கந்தகம், கோஷ்டம், முருங்கை இலை, எருக்கு இலை, வில்வ இலை, சேங் கொட்டை, வேப்பம்பட்டை, வசம்பு, சாக்கொன்னைப்பட்டை இவைகளாலும், வேப்பம்பட்டை, அரசம் தளிர், பெருங்காயம், வசம்பு, ஆட்டுரோமம், சிவநிர்மால்யம், நெய், குக்குலு, வெண் கடுகு இவைகளாலும், பெருங்காயம், வேப்பம்பட்டை, வெண் கடுகு, வெள்ளாட்டு ரோமம், எருதின் ரோமம், இவைகளாலும். பருத்திவிதை. மயில்தோகை, முள்ளுக்கத்திரி, சிவநிர்மால்யம் மலங்காரக்காய், லவங்கப்பட்டை மரமஞ்சள், பூனை மலம், உமி, வசம்பு, கேசம, பாம்புசட்டை. யானைத்தந்தம், மான்கொம்பு, பெருங்காயம், உள்ளிப்பூண்டு, இவைகளாலும் தூபமிடலாம்.

2. வில்வவேர், அழிஞ்சில் விதை, மனேசிலே, கோஷ்டம், மஞ்சள், சிவநிர்மால்யம், வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பட்டை, யானைத்தோல், பெருங்காயம், உள்ளிப்பூண்டு, நன்னரி, அமுக்கராங்கிழங்கு அஞ்சனக்கல், குங்குமப்பூ, தேவதாரு, வெட்பாலையரிசி, கமேலா, ஜடாமாம்ஸி, மயில் இறகு, இவைகளை சுரைக்காய் ஜலத்தை விட்டு ஊரவைத்து, தூபமிட கிரஹபீடை நீங்கும்.

4 ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி சிறுநாகப்பூ, அழிஞ்சில்விதை, வில்வவேர், பாதிரிவேர், முன்னைவேர், பெருவாகைவேர், குமிழன் வேர், மரமஞ்சள், கார்போகரிசி இவைகளை மஞ்சள் கஷாயத்தில் ஊறவைத்து நஸ்யமிடவும்.

5 கத்தாழை, பேய்த்தும்மட்டி, கொட்டைக்கரந்தை, இவைகளை சிறுநீரில் அரைத்து நஸ்யமிட கிரஹங்கள் நீங்கும். உள்ளிப்பூண்டு, மஞ்சள் பெருங்காயம், வெண்கடுகு, கீழா நெல்லி மிளகு, கடுகரோஹிணி இவைகளால் நஸ்யமிடவும்.

வசம்பு, மனோசிலை, கொக்கின் இறகு, மஞ்சிட்டி, இவைகளை ஆட்டுமூத்திரத்தில் அரைத்து அஞ்சனமிட கிரஹபீடை நீங்கும். வேப்பிலை, காகோலீ, நருமுருங்கை, திப்பிலி, காட்டுபழு பாகல், கத்தாழை, மிளகு இவைகளை ஆட்டு மூத்திரத்தில் அரைத்து அஞ்சனமிடலாம். வாலுளுவையையும், கந்தகத்தையும் கோமூத்திரத்தில் அரைத்து கண்ணில் அஞ்சனமிடலாம் நாள்பட்ட நெய்யும் அஞ்சனமிட நல்லது. திரிபலை ஏலம் லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஞாழல்பூ, தேவதாளி பீர்க்கு இவைகளைத் தேனுடனும், மஞ்சள், முடக்கித்தான், இவைகளையும் கண்ணில் அஞ்சனமிட நல்லது. தேத்தான் விதை, அதிமதுரம், திராக்ஷை, இவைகளையும், அஸாரூன், சந்தனம், தாளகம், மனோசிலை, நெல்லிமுள்ளி, இவைகளையும், கண்ணில் அஞ்சனமிடலாம். ஆட்டு மூத்திரத்தில் அரைத்த திரிகடு சூர்ணமும், முள்ளுகத்திரி சாறும் அஞ்சனமிடலாம்.

7. மேல் பூச்சு : சீந்தில் கொடி பேய்ப்புடல், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், நெல்லிக்காய்த்தோல், தானிக்காய்த் தோல், கொடிவேலி வேர்ப்பட்டை, மனோசிலை, ஒட்டடை, வெள்ளைலோத்திரப்பட்டை சந்தனம், தேவதாரு இவைகளின் சூர்ணத்தை மேல் பூச கிரஹபீடை விலகும், பூனை, ஓநாய், யானை, குரங்கு இவைகளின் விஷ்டையை அரைத்துப் பூசலாம். மலங்காரைக்காய், ஊமத்தை விதை, மஞ்சள், இவைகளை சிறு நீருடன் அரைத்து பூசலாம். வேப்பிலை, வேப்பம்பட்டை, உள்ளிப்பூண்டு இவைகளையோ அரசமரத்துப்புல்லுருவியையோ சிறுநீருடன் அரைத்துப் பூசலாம்.

8. ஸ்நானம் : சிவன் கோயிலில் நெல்லி இலைகளைக் கஷாயமாக்கி ஸ்நானம் செய்யலாம். சிவ நிர்மால்யம், விளாமிச்சைவேர் கஷாயம், கோமூத்திரம் இவைகளைக்கொண்டு நாற்சந்தியிலோ, காட்டிலோ, அம்மன் கோயிலிலோ, மலைக் கோயிலிலோ, ஆற்றங்கரையிலோ ஸ்நானம் செய்விக்க நல்லது.

9. பானம்: சீந்திற் கொடி, மிளகு, நிலவேம்பு, முருங்கைப் பிசின் ஆவல்பட்டை, அழிஞ்சில், காட்டு பழு பாகல் இவைகளின் கஷாயத்தைச் சாப்பிட கிரஹபீடை விலகும். இலந்தை, அரசு இவைகளின் பட்டையையும், துளிரையும் ஜலம் விட்டரைத்து குக்குலுவும் இந்துப்பும் மேம்பொடியாகச் சேர்த்து சாப்பிட நல்லது. சிவப்பு அரளி அதிமதுரம், இலுப்பைப்பூ, வசம்பு, பேய்ப்பீர்க்கு, இவைகளை தனித்தனியாகவோ சேர்த்தோ பூசணிக்காய் சாற்றிலும், ஆட்டு மூத்திரத்திலும் அரைத்து கலக்கி கொடுக்கலாம் பெருங்காயம், தேவதாரு, மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சிட்டி, பூண்டு, வசம்பு, சிறுவாகை, புங்கங்கொட்டை, கடுகு இவைகளை கல்கமாக்கி வாழைக்கிழங்கு சார், கோமூத்திரம் இவைகளுடன் நெய் காய்ச்சி சாப்பிடலாம்.

10. வஜ்ரக கிருதம்: கடுக ரோஹிணி உள்ளிப்பூண்டு மஞ்சள், சாம்பிராணி, சந்தனம், செஞ்சந்தனம், குங்குலியம், மனேசிலை, வெண் கடுகு, மஞ்சிட்டி, கண்ட ந்திப்பிலி, தகரவிதை பதிமுகம், கடுக்காய்த்தோல், தானிக்காய்த்தோல், நெல்லிக் காய்த்தோல், ஏலக்காய், வசம்பு, கோஷ்டம், அஞ்சனக்கல், மலங்காரைக்காய், அதிமதுரம், கக்கரிவிதை, காகோலீ துளசி, கருந்துளஸி, இலுப்பைவைரம், ஓரிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைக் குங்குலியம், ஒட்டுப்புல், ஜீவகம் ருஷபகம், திராக்ஷை புஷ்கரமூலம், பேரரத்தை, பூமிசக்கரைகிழங்கு இவைகளைக் கல்கமாக்கி சிற்றுமுட்டியும் பெருமுட்டியும் கஷாயமாக்கி, கழுதை, ஒட்டகை, எருது, செம்மறி ஆடு, யானை இவைகளின் சிறுநீருடன் நெய் காய்ச்சி, பெருங்காயமும். கொடிவேலி வேர் சூர்ணமும் மேம்பொடியாகச் சேர்த்து சாப்பிட மகாகிரஹங்கள், தோஷ உன்மாதங்கள், அபஸ்மாரம், பிசாசு இவைகளின் பீடை நீங்கும். காந்தி, புஷ்டி, பலம் கிடைக்கும்.

11. அரேணுகம், பேய்ததும்மட்டிவேர், கடுக்காய், தான்றிக் காய், நெல்லிக்காய், கோஷ்டம், ஏலரிசி, தகரவிதை, ஓரிலைவேர், சந்தனம், நன்னாரி, மஞ்சள், சீந்தில் கொடி, மாதளம் வேர், மூவிலை, மஞ்சிட்டி, தந்தீமூலம், முள்ளுகத்திரி, ஞாழல், தாளிஸ பத்திரி, வாய் விடங்கம், மல்லி இலை, நீலோத்பலக்கிழங்கு, வெட்டிவேர், பதிமுகம், இவைகளைக் கல்கமாக்கிச் சேர்த்து, பழைய நெய்யை நான்கு பங்கு சுத்தஜலத்துடன் காய்ச்சி, சாப்பிட, கிரஹ தோஷம் நீங்கும்.

12. கடுகு, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஞாழல்பூ, மஞ்சிட்டி, மஞ்சள், மரமஞ்சள், மந்தாரை, வேப்பம்பட்டை, புங்கம்பட்டை, கண்டங்கத்திரி, இவைகளைக் கல்கமாக்கி, கோமூத்திரம் சேர்த்து தயாரித்த நெய் சாப்பிட நல்லது.

13. வெட்பாலைப்பட்டை, எருக்கம்வேர், வேப்பம்பட்டை, துளஸீ, ஏலம், மணிப்புங்கு சந்தனம், சுக்கு மிளகு, திப்பிலி. கண்டந்திப்பிலி, தேக்கு, உள்ளிப்பூண்டு, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிக்காய்த்தோல், நாகதந்தீமூலம், பெருங்காயம் குக்குலு, இவைகளைக் கல்கமாக்கி, மூத்திர வர்க்கத்துடனே, கோமூத்திரத்திடனே. சங்கங்குப்பி சாற்றுடனே, ஏழிலம்பாலைப்பட்டை சாற்றுடனே சேர்த்து நெய் காய்ச்சி சாப்பிட நல்லது,

14. உள்ளிப்பூண்டு, மஞ்சள், ஆடாதோடைவேர், கண்டங்கத்திரி, கோரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, நன்னாரி, யானைவணங்கி, துளசி, தேவதாரு, திராக்ஷை, வாய்விடங்கம், குக்குலு, அஞ்சனக்கல், சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு, சரக்கொன்னைபட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை, செவதை வேர்ப்பட்டை, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், கோஷ்டம், இவைகளைக் கல்கமாக்கி, வல்லாரைச் சாற்றில் நெய் காய்ச்சி சாப்பிட நல்லது.

15. பூதராவ கிருதம்: சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், பச்சிலை, குங்குமப்பூ, கண்டந்திப்பிலி, யவக்ஷாரம், கண்டங்கத்திரி, மஞ்சள், மரமஞ்சள், கடுகு, வெண்கடுகு, வெட்டிவேர், வெட்பாலையரிசி, மருதம்பட்டை, உள்ளிப்பூண்டு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், விளாமிச்சைவேர், கோரைக்கிழங்கு, வசம்பு, துத்தம், அதிமதுரம், சிற்றுமுட்டிவேர், செஞ்சந்தனம், ஏலரிசி, மனோசிலை, பதிமுகம், தயிர், தகரவிதை, இலுப்பை வைரம், ஞாழல், மஞ்சள், அதிவிடயம், அஞ்சனக்கல், கற்பாசி, செவியம், கோஷ்டம், இவைகளைக் கல்கமாக்கி, பழைய நெய்யை மூத்திர வர்க்கத்துடன் சேர்த்துக் காய்ச்சிச் சாப்பிட நல்லது.

16. மகாபூதராவ கிருதம்: தகரவிதை, அதிமதுரம், புங்கம்பட்டை, கொம்பரக்கு, பேயப்புடல், மஞ்சிட்டி, வசம்பு, பாதிரிவேர், பெருங்காயம், கடுகு, முள்ளிகத்திரி, மஞ்சள், பிரம்மதண்டீ, மலங்காரைக்காய், சுக்கு மிளகு, திப்பிலி, தேவதாரு, வாய்விடங்கம், அஞ்சனக்கல், நான்முகப்புல், அழிஞ்சில், பேய்ப்பீர்க்கு, முருங்கப்பட்டை, வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, கோஷ்டம், வாகைப்பூ, வாகைவிதை, வசம்பு, அதிமதுரம், கொடிவேலி வேர்ப்பட்டை, காக்கரட்டான் வேர், சிவதைவேர், வில்வவேர் இவைகளை ஸம அளவு கல்கமாக்கி, மூத்திரவர்க்கத்துடன் சேர்த்து காய்ச்சிய நெய் சாப்பிட நல்லது.

இவ்விதம் பத்துவித பூதசிகித்ஸை முடிவுற்றது.

ஆரோக்கிய கல்பத்துருமம்

சோதத்தில் சிகித்ஸை (தொடர்ச்சி)

இஞ்சியும் சர்க்கரையும் சேர்த்து இழைத்து தேன் கூட்டிச் சாப்பிட எல்லாவித வீக்கமும் குறையும்.

குடார்த்ரகம்: பழைய வெல்லத்தை இஞ்சிச் சாற்றில் பாகாக்கி, அதில் ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, சுக்கு, திப்பிலி, மிளகு, கோரைக்கிழங்கு இவைகள் எல்லாவற்றையும் வெல்லத்திற்கு எட்டில் ஒரு பங்கு மொத்தமாய்த் தூள் செய்து கலந்து இறக்கி வெல்லத்தில் பாதி தேன் கூட்டிக் கொடுக்க எல்லா வீக்கமும் குறையும். மற்றும் பசியின்மை, சுவாஸம், காஸம், பீநஸம், வயிற்றுவலி, குல்மம், மண்ணீரல் வலி, அதிஸாரம், ஸந்யாஸம் இவைகளில் நல்லது.

பஸ்ம கஞ்சிகள்: மூக்கரட்டை வேரையும் நீர்முள்ளியையும் இடித்துச் சாம்பலாக்கித் தண்ணீரில் கரைத்துத் தெளிய வைத்து, தெளிந்த ஜலத்தில் கஞ்சி வைத்துப் பால் சேர்த்துச் சாப்பிடலாம். பனைவிரல், திரிபலை, வாழைக்கிழங்கு, நாயுருவி, நீர்முள்ளி வேர், மூக்கரட்டை வேர் இவைகளைச் சாம்பலாக்கி முன்போல் கஞ்சி வைத்துச் சாப்பிடலாம். தனியாக நீர்முள்ளியை மாத்திரம் சாம்பலாக்கிக் கரைத்துத் தெளிந்த ஜலத்தில் சாதம் வடித்து நெய் சேர்த்துச் சாப்பிடலாம்.

கந்தகிருதம்: கரிக்கொட்டிக் (புளிநரளை?) கிழங்கை கோமூத்திரம் விட்டரைத்துக் கலக்கி நெய் சேர்த்துக் காய்ச்சித் தயாரித்த நெய் சோதத்தில் நல்லது.

தாத்ரியாதி தைலம்: நெல்லிமுள்ளியின் கஷாயம். அறுகம் புல், வில்வ இலை, லோத்திர இலை, சீந்திற்கொடி, கருசாங் கண்ணி இவைகளை இடித்துப் பிழிந்த ரஸம்; ஏலரிசி, லவங்கப் பட்டை, பச்சிலை, கோரைக்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனத்தூள், விளாமிச்சை வேர், வெட்டிவேர் இவைகளின் கல்கம் – இவைகளைக் கொண்டு நல்லெண்ணெய்யோ, தேங்காய் எண்ணெய்யோ, சேர்த்துக் காய்ச்சிய தைலம் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்ய நல்லது.

வேலிப்பருத்திச் சாறு, லவங்கப்பட்டை, பச்சிலை, அதிமதுரம், ஏலரிசி, குந்துருக்கம், தூணியாங்கம், ஸரள தேவதாரு, இவைகளை அரைத்துக் கல்கம் சேர்த்துத் தயாரித்த நல்ல எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் ஸ்நானத்திற்கு நல்லது.

வில்வாதி தைலம்: வில்வ இலை, கரிக்கொட்டிக் கிழங்கு, மூக்கரட்டை வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளின் சாற்றில் திரிபலையைக் கல்கமாக்கிந் தயாரித்த தைலம் நல்லது.

திரிபலாதி தைலம்: திரிபலை, தேவதாரு, வேங்கை வைரம், அதிமதுரம், சித்தாமுட்டி வேர், கோரைக் கிழங்கு இவைகளின் கஷாயம்; மூக்கரட்டைச்சாறு, பிரப்பங் குருத்தின் சாறு, முள்ளுக் கத்திரி இலைச்சாறு இவை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யுடன் சமஅளவில் சேர்த்து ஏலரிசி, கோரைக்கிழங்கு, கருவேலம் பட்டை, மரமஞ்சள், குந்துருக்கம், கோஷ்டம், வெட்டி வேர், விலாமிச்சைவேர், அதிமதுரம், சந்தனம் இவைகளைத் தூள் செய்து கல்கமாக்கி தைலம்வடித்து தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யவும். மேல் ஊற்றிக்கொள்ள நெல்லிமுள்ளி போட்டுக் கொதிக்கவைத்த வென்னீரை உபயோகப்படுத்தவும்.

உடலுக்கு புளியிலைச் சாறு அல்லது கஷாயத்தில் சித்தரத்தை மூக்கரட்டை வேர், மெருகன் கிழங்கு இவைகளைக் கல்கமாக்கி எண்ணெய் கலத்து காய்ச்சி வடித்து தைலம் தேய்த்து ஸ்நானம் செய்யலாம்.

கிருமி ரோகத்தில்

விடங்காதி கஷாயம்:— வாய்விடங்கம், மஞ்சள், மரமஞ்சள். புரசம்பட்டை இவைகளைக் கஷாயமிட்டு பெருங்காயம் சேர்த்து சாப்பிட வயிற்றிலுள்ள புழுக்கள் வெளியாகும்.

தாழையின் இளம் வேரை மட்டும் கஷாயமிட்டு இந்துப்பும் பெருங்காயமும் சேர்த்துக் கொடுக்கலாம். பாகலிலைச் சாற்றில் புரசம்பூவின் தூளையோ, வாய்விடங்கம், மிளகு, சுரை விதை இவைகளின் தூளையோ கலக்கிச் சாப்பிடலாம். பூனைக்காலிக்கா யின் தூள் முருங்கைப்பட்டை வாய்விடங்கம் மஞ்சள் பெருங்காயம் இவைகளைத் தனித் தனியாகவும் பொடித்து சர்க்கரையுடன் கலக்கிக் கொடுக்கலாம்.

கண்டத்திப்பிலி, திப்பிலி, முருங்கைவேர், வாய்விளங்கம், மிளகு இவைகளின் கஷாயத்தில் கஞ்சி வைத்து மோர் விட்டுச் சாப்பிடலாம். கஷாயத்துடன் மோரைக் கலந்து அதிலேயே கஞ்சியும் தயாரிக்கலாம்.

காட்டுக் கருணைக்கிழங்கு, மஞ்சள் இவைகளைக் கொண்டு மோர்க்கடி தயாரித்தும் அல்லது குப்பைமேனித் தழை கொண்டு மோர்க்கடி தயாரித்தும் கொடுக்கலாம்.

காலையில் வசம்புத்தூளை பசுவின் சிறுநீரில் கலக்கிக் கொடுக்கலாம். அல்லது பாகலிலைச் சாற்றில் நல்லெண்ணெய் கலந்தும் கொடுக்கலாம். புகைக் கரி (ஒட்டடை) யைச் சூடான காடியில் கலந்தும் தனியாக வாய்விடங்கம் மாத்திரம் தயாரித்த மோர்க்கடியும் கொடுக்கலாம்.

கேதகி சர்க்கரை :— தாழையின் இளம் வேர் 640 கிராம் எடை எடுத்து 12 லிட்டர் ஜலத்திலிட்டு, கால் பங்கு மீதமாக்கி வடிகட்டி 320 கிராம் சர்க்கரை கலந்து பாகாக்கி அதில் வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, நிலவேம்பு, புரசம்பூ, கடுக்காய் தோல் இவை வகைக்கு 10 கிராம் எடைத் தூள் செய்து போட்டுக் கிளறி லேகிய பதத்தில் இறக்கவும். முதலில் பேதிக்குக் கொடுத்த பின்னர் இதை தயிர் தெளிவுடனே, தேனுடனே, பச்சை நெல்லிக்காய் சாற்றுடனே, கோரைக்கிழங்கு கஷாயத்துடனே கொடுக்க நல்லது.

ஸாரசர்க்கரை

வெள்ளைப்புல்லாணி (மலையாளப் பெயர்) யுடைய தண்டை வெட்டி அதிலிருந்து தானே வடியும் ஜலம், முருங்கைவேர் அத்தி வேரும் எடுத்து வாட்டி அதில் வடியும் ஜலம் இவ்விரண்டும் 12 லிட்டர் ஜலத்தில் 320 கிராம் சர்க்கரை கலக்கி பாகாக்கி, கெட்டியானவுடன் இறக்கிக் கையால் தொடுமளவிற்கு ஆறியதும் இலந்தைக்கொட்டை அளவு மாத்திரை உருட்டி வைத்துக் கொள்ளவும், தினமும் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு மாத்திரை சாப்பிட்டு வர 15 நாட்களில் கிருமிகள் எல்லாம் விழுந்துவிடும்.

பொதுவாக கசப்பும் உரைப்பும் அதிகமாயுள்ளது நல்லது. தித்திப்பு இவ்வியாதிக்கேற்றதல்ல. அதில் சூடும் உரைப்பும் கசப்பும் அதிகமானதும் நெய் முதலிய ஸ்னேஹாம்சம் குறைந்துமுள்ள ஆகாரம் நல்லது. தித்திப்பான அன்னம், வெல்லம், பால், தயிர், காடி, புதிய அரிசிச்சாதம், காய்கறி, கிழங்கு வகை இவைகளைத் தள்ளுவது நல்லது.

[தொடரும்]

இம்ப்காப்ஸ்
பூரண இயந்திர சாதன
வசதியோடு சுத்தமான
ஆயுர்வேத, சித்த, யுனானி
மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:
4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press, Tiruchirapalli-2.